**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 97/2023**

**Deposition of Witnesses for PW1**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ரமேஷ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023, on the day of 11.08.2025.

**எதிரி PT வாரண்டில் ஆஜர்படுத்தப்பட்டார். இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

<u>முதல் விசாரணை</u>

நான் கமுதி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்று ராமநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 05.02.2020ம் தேதி கீழக்கரை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது 10.30 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு.ராமசந்திரன் அவர்களுக்கு கிடைத்த தகவலின் பேரில் நான், த.கா.ரமேஷ் மற்றும் சார்பு ஆய்வாளர் திரு.ராமசந்திரன் ஆகியோருடன் புறப்பட்டு செல்லும் முன்பு சார்பு ஆய்வாளர் திரு.ராமசந்திரன், காஞ்சிரங்குடி விஏஓ, கிராம உதவியாளரை சம்பவ இடமான கீழக்கரை கிழக்கு தெருவிற்கு வரசொல்லிவிட்டு நாங்கள் அங்கு சென்று கண்காணித்து கொண்டிருந்தபோது டி.என்.65 AH 5226 என்ற பஜாஜ் ஆட்டோ ஒன்று வேகமாக வந்தது. அதை நிறுத்த சொல்லி சைகை காட்டினோம். ஆனால் நிறுத்தாமல் சென்ற ஆட்டோவை கீழக்கரை கிழக்கு தெரு அப்பா பள்ளி வாசல் அருகே விரட்டி பிடித்து விசாரித்தபோது முகமது உபைஷ் , த/பெ.கனிகபூர், மேல தெரு, கீழக்கரை என்று சொன்னவரிடம் எங்களை அறிமுகம் செய்து கொண்டு அவர்கள் வந்த வாகனத்தை சோதனை செய்தபோது ஆட்டோவின் பின்புறம் பாலிதீன் பையில் கஞ்சா இருந்தது. சார்பு ஆய்வாளர் தயார் செய்த சம்மத கடிதத்தில் விஏஓ, கிராம உதவியாளரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தனர். மேற்படி நபரிடம் உம்மிடம் உள்ள பையில்

கஞ்சா எனும் போதை பொருள் இருப்பதாக நம்பகதனமான தகவல் உள்ளது. எனவே உன்னுடைய கையில் வைத்திருந்த பையை சோதனை செய்ய வேண்டும் என்றால் நீதித்துறை நடுவர் முன்பாகவோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியின் முன்பாகவோ அழைத்து சென்று சோதனை செய்ய உரிமை வேண்டும் பின்பு எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பையை சோதனை செய்து பார்த்தபோது அதில் உலர்ந்த நிலையில் உள்ள இலை, தழைகளுடன் கூடிய கஞ்சா இருந்தது. கஞ்சாவை எடை போட்டு பார்த்தபோது, அதில் 1.100 கிகி கஞ்சா இருந்தது. அதில் பகுப்பாய்விற்காக தலா 50 கிராம் எடுத்து, பாலிதீன் கவரில் வைத்து, காக்கி கவரில் மடித்து, SHO சீல் வைத்தும், S1,S2 என குறியீடு செய்தும், மீதமுள்ள 1.000 கிகி கஞ்சாவை அதே பாலிதீன் கவரில் வைத்து கட்டி, SHO சீல் வைத்தும், எதிரி முகவரியுடன் கூடிய அத்தாட்சி விவர லேபிள் தயார் செய்து, ஒட்டி அதில் எதிரி மற்றும் சாட்சிகளாக விஏஓ, கிராம உதவியாளரும் ஆகியோர் கையெழுத்து செய்தனர். எதிரி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் சாட்சிகளாக விஏஓ, கிராம உதவியாளரும் ஆகியோர் கையெழுத்து செய்தனர். ஆய்வாளர் தயார் செய்த அத்தாட்சியில் சாட்சிகளாக விஏஓ, கிராம உதவியாளரும் ஆகியோர் கையெழுத்து செய்தார்கள். பின்பு 11.30 மணிக்கு எதிரி மற்றும் சொத்துகளுடன் காவல் நிலையம் அழைத்து வந்து கீழக்கரை கா.நி.கு.எண்.20/2020 பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B) NPDS Act- ஆக வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

இந்த வழக்கில் நான் எந்த ஆவணங்களிலும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். ஆவணங்களை யார் எழுதினார்கள் என்றால் டைப் செய்தார்கள். சாட்சி உடனே அவை எழுதப்பட்டதாக சாட்சியம் அளிக்கிறார். ஆவணங்களை எழுதிய விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். அவற்றை யார் எழுதினார்கள் சார்பு ஆய்வாளர் சொல்ல காவலர் ஒருவர் எழுதினார். அந்த காவலர் பெயர் எனக்கு தெரியுமா என்றால் அது தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. முதலில் ஆட்டோவை நாங்கள் பார்த்த இடத்திற்கும் எதிரியை பிடித்த இடத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 500 மீட்டர் இருக்கும். ஆவணங்கள் மற்றும ஆய்வாளர் விசாரணையில் நாங்கள் எந்த வாகனத்தில் சென்று எதிரியை

பிடித்ததாக சொல்லியுள்ளோம் என்றால் இருசக்கர வாகனத்தில் சென்றதாக சொல்லியுள்ளோம். விஏஓ, கிராம உதவியாளர் அவர்கள் கையெழுத்து செய்ததில் சீல் வைத்தார்களா என்றால் சீல் வைக்கவில்லை. அத்தாட்சியில் எதிரியிடம் கையொப்பம் பெறப்பட்டதா என்றால் இல்லை. ஆட்டோ சாவி, வேறு ஆவணங்கள் ஆட்டோவில் கைப்பற்றப்பட்டதா என்றால் அது தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. நான் முதல ் விசாரணையில் சொன்னது போல் சம்பவ எதுவும் நடைபெறவில்லை என்றும், சார்பு ஆய்வாளருடன் ரைடுக்கு செல்லவில்லை என்றும், எதிரிகளிடம் எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றும், வழக்கு சொத்துக்கள் மற்றும் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றும், வழக்கு சொத்திற்கும் எதிரிகளுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு சென்றதாக சொல்வது பொய் என்றும், உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் சாட்சிகள் கையெழுத்து செய்ததாக சொல்வது பொய் என்றும்  தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி யாரும் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி வீட்டில் இருந்த நபரை விசாரணை என்ற பெயரில் காவல் நிலையம் அழைத்து சென்று பொய்யாக இந்த வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உயரதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கணிங்க உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:-**

இல்லை

Taken down by me in open court
read over to the witness and
admitted by him to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.